**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 10 ஜனவரி 2018

Nestlé
Good Food, Good Life

## *Maggi* நூடில்ஸின் உயர் தர நடைமுறைகளுக்காக SLSI இன் இனங்காணல் அங்கீகாரம்

அண்மையில் இடம்பெற்ற SLSI (இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின்) விருதுகள் வழங்கும் நிகழ்வில் மிகவும் அபிமானத்தைப் பெற்ற நெஸ்லே நிறுவனத்தின் *Maggi* நூடில்ஸ் உற்பத்திகளுக்கு அவற்றின் உயர் தர நடைமுறைகளுக்காக இனங்காணல் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. *Maggi* Chicken, Curry, Daiya, Tikiri மற்றும் Double Pack நூடில்ஸ் உற்பத்திகள் மற்றும் *Maggi* Devilled Chilli Chicken மற்றும் Spicy Blast நூடில்ஸ் உற்பத்திகள் அடங்கலாக ஒட்டுமொத்த *Maggi* நூடில்ஸ் உற்பத்தியும் தற்போது SLS தரச்சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

இலங்கையின் தேசிய தரக் கட்டளைகள் அமைப்பாக இலங்கை கட்டளைகள் நிறுவனம் இயங்கி வருவதுடன், சர்வதேச கட்டளைகள் நிறுவனத்தின் ஒரு உறுப்பு நிறுவனமாகவும் அது செயற்பட்டு வருகின்றது. இலங்கை கட்டளைகள் தரச்சான்று அங்கீகாரம் (SLS) என்பது உற்பத்தியொன்று இலங்கை தர நடைமுறை வரையறைகளுக்கு அமைவாக உற்பத்தி செய்யப்படுவதையும், அந்த உற்பத்தியை தரத்திற்கான உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்ய முடியும் என்பதையும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கணக்காய்வுகள் மற்றும் உற்பத்தி சோதனை நடவடிக்கைகள் மூலமாக நிறுவனத்தின் தர நிர்ணய முறைமை ஒழுங்காக கண்காணிக்கப்பட்டு, அதன் மூலமாக தொடர்ச்சியான இணக்கப்பாடு உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவரான திரு. பிரதீப் குணவர்த்தன அவர்கள் கூறுகையில், *"நெஸ்லே நிறுவனம் தனது Maggi நூடில்ஸ் உற்பத்தி வரிசைக்கு SLS சான்று அங்கீகாரத்தை வெற்றிகரமாக பெற்றுள்ளமைக்காக நெஸ்லே நிறுவனத்திற்கு எனது இதயபூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். SLS உற்பத்தி சான்று அங்கீகாரமானது தரத்தின் சின்னமாக விளங்குவதுடன், உற்பத்திக்கு சுயாதீன அரசாங்க அமைப்பினால் சான்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த தரச்சான்று அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதன் மூலமாக தர முகாமைத்துவ நடைமுறைகளுக்கு இணங்குதல் என்ற இனங்காணல் அங்கீகாரச் சின்னத்தை Maggi பெற்றுள்ளது,"* என்று குறிப்பிட்டார்.

*Maggi* நூடில்ஸ் உற்பத்தி வரிசையானது குருணாகலிலுள்ள நெஸ்லே நிறுவனத்தின் அதிநவீன உற்பத்தி மையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. மிகவும் கடுமையான தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள், கடுமையான உற்பத்தி சுகாதார நடைமுறைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு தர நடைமுறைகள் என்பன உள்நாட்டு மற்றும் சர்வதேச உணவுப் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் தர நடைமுறைகளுக்கு அமைவாக தரக் கட்டுப்பாட்டுச் சோதனைகள் மற்றும் முழுமையான சோதனைகளுக்கு அமைவாகவே அவை உற்பத்தி செய்யப்படுவதுடன், உற்பத்தி நடைமுறையின் ஒவ்வொரு படிநிலையிலும் அவை கண்டிப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

*"எமது அபிமானத்தைப் பெற்ற Maggi நூடில்ஸ் உற்பத்தியின் தரத்திற்கு அதியுச்ச சுயாதீன உத்தரவாதத்தைப் பெற்றுள்ளமை எமக்கு மிகுந்த பூரிப்பளிக்கின்றது,"* என்று நெஸ்லே நிறுவனத்தின் உணவுத்துறைக்கான பிரதித் தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ன அவர்கள் குறிப்பிட்டார். *"இலங்கையில் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ள Maggi, பல தலைமுறைகளாக நாட்டில் நம்பிக்கைமிக்க வீட்டு விருப்பத்தெரிவாக திகழ்ந்து வருகின்றது. சுவை மற்றும் நலச்செழுமைக்கான உத்தரவாதத்துடன், அதியுயர் தரம் கொண்ட உற்பத்திகளை வழங்குவதில் எப்போதும் வலுவான கவனத்தைச் செலுத்தியுள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில், Maggi இனைப் பொறுத்தவரையில் இது மிக முக்கியமான ஒரு சாதனை இலக்காக மாறியுள்ளது,"* என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *"நெஸ்லே நிறுவனம் தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எப்போதும் அதிமுக்கியத்துவம் அளித்து வருகின்றது. இது எமது உணவு மற்றும் பான வகை உற்பத்திகளுக்கு மட்டுமன்றி, எமது முறைமைகள் மற்றும் சேவைகள் அனைத்திற்கும் பொருந்தும். அதியுயர் தரம் கொண்ட உணவு மற்றும் பான வகைகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மீது நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டிற்கான இனங்காணல் அங்கீகாரமாக SLS தரச் சான்று அங்கீகாரம் அமைந்துள்ளதுடன், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தினை கடைப்பிடித்து வருகின்ற நெஸ்லே நிறுவனத்திற்கு மற்றுமொரு சாதனை இலக்காகவும் அமைந்துள்ளது,"* என்று குறிப்பிட்டார்.

*Maggi* நூடில்ஸ் தனது நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எப்போதும் முதலிடம் அளித்து வந்துள்ளது. *Maggi* நூடில்ஸ் உற்பத்திகள் அனைத்தும் கல்சியத்தின் செழுமை நிரம்பியதுடன், உணவில் சேர்க்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ள இந்த நுண்ஊட்டசத்தின் 1/3 பங்கினை நுகர்வோருக்கு வழங்குகின்றது.

இன்னும் அதிக அளவில் இயற்கையான மற்றும் பழக்கமான சேர்க்கைப் பொருட்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற உள்நாட்டு நுகர்வோரின் விருப்பத்தெரிவுகளை நிறைவேற்றும் வகையில், எட்டு பிரபலமான உள்நாட்டு வாசனைத்திரவியங்களை உள்ளடக்கி, சுவையை மேம்படுத்துவதற்காக *Maggi* தனது பிரபலமான chicken flavoured நூடில்ஸ் உற்பத்திகளுக்கு புது வடிவம் கொடுத்துள்ளது. இந்த உற்பத்தியானது மரக்கறி வகைகள், மூலிகைகள் மற்றும் இலங்கையில் சமையலறைகளில் பாரம்பரியமாக உபயோகிக்கப்படுகின்ற கொத்தமல்லி, ஏலக்காய், மஞ்சள், சீரகம், மிளகு, ஜாதிக்காய், வெந்தயம் மற்றும் சோம்பு ஆகிய பிரபலமான வாசனைத்திரவியங்களைக் கொண்டுள்ளது. ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு இடமளிக்க வேண்டும் என்ற நெஸ்லே நிறுவனத்தின் சர்வதேச அளவிலான அர்ப்பணிப்பிற்கு இணங்க, அதிக சுவை கொண்ட மற்றும் அதிக ஊட்டச்சத்து கொண்ட தெரிவுகளை வழங்கி, ஊக்குவிக்கும் "Simply Good" என்ற *Maggi* இன் புதிய முன்னெடுப்பின் ஒரு அங்கமாக மேற்குறிப்பிட்ட புது வடிவம் அமைந்துள்ளது. ஆரோக்கியத்தை மையமாகக் கொண்ட சமையல் மீது நாட்டம் அதிகரித்துச் செல்லும் நிலையில், "Simply Good" திட்டமானது *Maggi* உற்பத்தி வரிசையில் உப்பின் அளவைக் குறைக்கும் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

நெஸ்லே நிறுவனம் ஏற்கனவே *Cerelac*, *Milkmaid*, *Maggi* தேங்காய்ப் பால்மா, *Nespray* Nutri-up, *Nescafé* Ice Coffee அடங்கலாக அதன் உற்பத்திகளுக்கு SLS தரச் சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், தனது உற்பத்தி மாதிரி விநியோகத்தில் 'சிறந்த உற்பத்தி தொழிற்பாடுகளுக்காக' நெஸ்லே விற்பனை ஊக்குவிப்புப் பிரிவிற்கும் SLSI இடமிருந்து தரச்சான்று அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இலங்கையில் முதற்தடவையாக ஊக்குவிப்புப் பிரிவொன்றுக்கு அத்தகைய அங்கீகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.